செ.வெ.எண்: 231 நாள்: 20.03.2020

**பொது மக்கள் தேவையற்ற பயணங்களை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.**

**வெளிமாநிலங்களிலிருந்து புதுக்கோட்டைக்கு வரும் பேருந்துகளின் இயக்கத்தை பாதியாக குறைத்து உத்தரவு.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் மற்றும் சுகாதாரத்துறை செயலர் டாக்டர்.பீலாராஜேஷ்,இ.ஆ.ப., அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக இன்று (20.3.2020) ஆலோசனை நடத்தினார்கள்.

இந்த ஆய்விற்கு பின் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழகஅரசு கொரோனா தொற்றை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்திலும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய தினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடன் நடைபெற்ற காணொலிக்காட்சி ஆலோசனையின் போது தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

பேருந்து நிலையங்கள், பொது இடங்களில் கொரோனா பரவுவதை தடுக்கும் வகையில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருவது குறித்தும், பொது மக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருவதன் விவரங்கள் குறித்தும் விளக்கப்பட்டது. குறிப்பாக வெளிமாநிலங்களிலிருந்து புதுக்கோட்டைக்கு வரும் பேருந்துகளின் இயக்கத்தை பாதியாக குறைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. பொது மக்கள் தேவையற்ற பயணங்களை முற்றிலும் தவிர்த்திட தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொது மக்களுக்கு கைகழுவுவதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஏதேனும் நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையினை அனுகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகள், பொது இடங்களில் தினமும் கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

தமிழக அரசு மேற்கொண்டு வரும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் அனைவரும் முழுஒத்துழைப்பு தருவதுடன், அரசின் அறிவுரைகளை தவறாமல் பின்பற்ற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.சந்திரசேகரன், பொதுசுகாதார துணை இயக்குநர்கள் மரு.அர்ஜுன்குமார், மரு.கலைவாணி, நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**